சித்தமருத்துவம் குறித்த மத்திய அரசின் அங்கீகாரம்.

109—(வினா எண் 17935)*திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த மருத்துவத்தை தனி மருத்துவமாக மத்திய அரசு அங்கீகரித்துள்ளதா?

(ஆ) இந்திய மருத்துவ ஆய்வுக்குழுவில் சித்த மருத்துவம் சேர்க்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) இது குறித்து தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவத்திற்கு பொதுவாக ஒரு ஆய்வுக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(இ) சித்தா பிரிவுக்கென்று தனியாக ஒரு மத்திய ஆராய்ச்சிக் கழகம் ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு வலியுறுத்தப்பட்டு வருகிறது.

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவம், பொதுமக்களுக்கு, ஏழைகளுக்கு அதிகச் செலவில்லாமல் கிடைக்கின்ற ஒரு மருத்துவமாகும். ஆகவே, சித்த மருத்துவத்திற்கென்று தனியாக ஆராய்ச்சிக் கழகம் ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசை நமது அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. மத்திய அரசு இப்பொழுது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? அது விரைவாக வருகின்ற சூழ்நிலை உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரை 'இந்தியன் மெடிசன்' என்பதற்கு அவர்கள் கொடுத்த விளக்க வாசகத்தை நான் படிக்கின்றேன். Indian Medicine means —The System of Indian Medicine commonly known as Ashtanga Ayurveda, Siddha cr Unani என்று கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் இந்தியன் மெடிசன் என்றால் இவை எல்லாம் வருகின்றன என்று சொல்கிறார்கள். நான் தமிழக சர்க்கார் சார்பாக, தமிழக மக்கள் சார்பாக சித்த வைத்தியத்தை ஒரு தனி அமைப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதற்கு அவர்கள் Siddha system is not All India character. Siddha system is mainly prevalent only in Tamil Nadu என்று சில வியாக்கியானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நாம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மீண்டும் மதிப்பிற்குரிய சங்கரானந்த் அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பி இருக்கிறோம். தமிழகத்திலே இருக்கிற அத்தனை எம்.பி.க்களுக்கும் கடிதம்

எழுதி இருக்கிறோம். மத்திய அமைச்சருக்கு எழுதிய கடிதத்தினுடைய நகலை, நம்முடைய ஸ்பெஷல் ரெப்ரசன்டேடிவ்விடம் கொடுத்து, அவர்களும் அதிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் சித்த வைத்தியத்திலும் ஆயுர்வேத வைத்தியத்திலும் பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? சித்த வைத்திய மருத்துவ மனைகள் பல இடங்களிலே மூடப்பட்டிருக்கின்றனவே, அவை திறக்கப்படாமலிருப்பதற்கு என்ன காரணம் என்று கேட்டபொழுது, பட்டப் படிப்பு படித்தவர்கள் இல்லையென்று சொல்கிறார்களே, அப்படிப் பட்ட நிலைமை தமிழகத்திலே இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் தனியாக சித்தப் பிரிவு இல்லாமல் இருந்தது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக எல்லா இடங்களிலும் சித்தப் பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்று துணிவாக ஆணை பிறப்பித்து அதற்கான ஏற்பாடு செய்தார்கள். அதன்பிறகு, இப்பிரிவுக்குத் தனியாக சித்த வைத்தியப் பட்டம் பெற்றிருக்கிற டாக்டர்களை நியமித்திருக்கிறோம். சில இடங்களிலே பட்டப் படிப்பு படித்தவர்கள் கிடைக்கவில்லை என்பதற்காக மற்ற பி2 வகுப்பு மருத்துவர்களைப் போட ஏற்பாடு செய்திருக்கிறோம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சித்த மருந்துகளால் 'ஆப்டர் எபெக்ட்ஸ்' இல்லையென்று சொல்லப்படுகிறதே அது உண்மையா? அப்படி 'ஆப்டர் எபெக்ட்ஸ்' இல்லையென்றால் அதை மேலும் ஊக்குவிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் தான் சித்த வைத்தியத்தை ஊக்குவிப்பதற்காகவும், வாய்ப் பேச்சளவில் இல்லாமல், திட்டவட்டமாக, தனியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு, மதிப்பிற்குரிய முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பாராட்டும் அளவுக்குப் பல காரியங்களை நாம் செய்திருக்கிறோம் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.